**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 9–ம் தேதி**

**2026-ம் ஆண்டு மார்ச் மாதம் –23ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –414/2022**

**CNR No: TNSV15-006135-2022**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக சார்பு ஆய்வாளர், திருப்புவனம் காவல்நிலையம் அதன் குற்ற எண்.405/2019 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | உதயகுமார், த/பெ.சுப்பன், பெருமாள்புரம் காலணி, கழுகர்கடை, திருப்புவனம் தாலுகா, சிவகங்கை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 10.12.2019 |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 22.01.2020 |
| எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 17.10.2023 |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | அ.சா.1: மு.வி 10.12.2025, கு.வி: இல்லை<br>அ.சா.1: மு.வி 10.12.2025, கு.வி: இல்லை<br>அ.சா.3: மு.வி 10.12.2025, கு.வி: இல்லை<br>அ.சா.4: மு.வி 11.03.2026, கு.வி: 11.03.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 18.03.2026 |
| தீர்வு | முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:04:28 +0530

| | |
|---|---|
| | தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு கடந்த 18.03.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கின் சாட்சி1 குடும்பத்திற்கும் எதிரிக்கும் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டு முன் விரோதம் இருந்து வருகிறது என்றும், கடந்த 10.12.2019ம் தேதி இரவு 10.30 மணியளவில் கழுகர்கடை கிராமத்தில் சாட்சி2 வீட்டின் திண்ணையில் தெருலைட் வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்த சாட்சி1யை பார்த்து எதிரி ஏற்கனவே உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்து தேவிடியாக் கூதி மகனே எப்ப பார்த்தாலும் என்னையையும் என் அம்மாவையும் ஜாடை பேசிக்கிட்டே இருக்க என்று பொது இடத்தில் அசிங்கமாக பேசி சாட்சி1ன் வலது பக்கம் தலையில் கத்தியால் வெட்டி சாதாரண காயத்தை ஏற்படுத்தி சாட்சி1ஐ பார்த்து இன்னைக்கு நீ தப்பலாம் நாளைக்கு நீ இல்லாவிட்டால் உன் சொந்தத்தில் உள்ள யார வேண்டுமானாலும் வெட்டுவேன் என கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ்குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:04:33 +0530

கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரி அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார். எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரி மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால்எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்தார்.

5) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

6.1) அ.சா.1 ராஜேந்திரன் தனது சாட்சியத்தில், தான் கழுகர்கடையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரி உதயக்குமாரை தனக்குத் தெரியும் என்றும், அவர் தனது உறவினர் என்றும், எதிரியுடன் தான் தற்போது சமாதானமாகிவிட்டதாகவும், கடந்த 10.12.2019 ம் தேதியன்று இரவு 10.30 மணியளவில் சாட்சி கோபி என்பவரது வீட்டின் அருகே தான் இருந்தபோது யாரோ ஒருவர் அங்கு வந்து தன்னைப் பார்த்து அசிங்கமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், இருட்டாக இருந்ததால் அவர் யாரென்று தனக்கு தெரியவில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது தான் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் மனு அ.த.சா.ஆ.1 என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 கோபி தனது சாட்சியத்தில், தான் கழுகர்கடையில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரி உதயக்குமாரை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.1 ராஜேந்திரனைத் தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.3)அ.சா.3 முத்துராக்கு தனது சாட்சியத்தில், தான் கழுகர்கடையில் குடியிருந்து 100 நாள் வேலைத் திட்டத்தில் வேலை செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரி உதயக்குமாரை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.1 ராஜேந்திரனைத் தெரியும் என்றும்,

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:04:39 +0530

அ.சா.2 தனது கணவர் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 கண்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 10.12.2019 ம் தேதியன்று 23.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் நிலையப் பொறுப்பிலிருந்தபோது கழுகேர்கடை காலனியைச் சேர்ந்த மாயன் மகன் ராஜேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண். 405/2019 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் 109 ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் திருப்புவனம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 என்றும், பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் எல்லம்மாள், கணபதிகார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளனர் என்றும், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 என்றும், பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான ராஜேந்திரன், கோபி, பிச்சையம்மாள், முத்துராக்கு, பிரபாகரன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அவரை அதே நாள் கழுகர்கடை பேருந்து நிறுத்ததில் வைத்து எதிரியை அடையாளம் கண்டு அவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், அதன் பின்பு காயம்பட்ட ராஜேந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஸ்டீபன் தனபால் என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், அந்த காயச்சான்று அ.த.சா.ஆ. 5 என்றும், அதன் பின்பு மேற்படி சார்பு ஆய்வாளர் இந்த வழக்கில் மற்றொரு எதிரியான நாகரத்தினம் த/பெ.ஆறுமுகம் என்பவர் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என தனது சாட்சி விசாரணையில் இருந்து தெரியவந்தது என கூறி அவரை இந்த

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:04:45 +0530

வழக்கிலிருந்து நீக்கரவு செய்து எதிரி நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கையை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரி நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.6 என்றும், அதன் பின்பு சார்பு ஆய்வாளர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் கடந்த 22.01.2020 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7)அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரி அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

8) இவ்வழக்கு எதிரி மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

9) **தீர்வு—**

இவ்வழக்கின் சாட்சி1 குடும்பத்திற்கும் எதிரிக்கும் சம்பவத்திலிருந்து ஒரு வருடத்திற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டு முன் விரோதம் இருந்து வருகிறது என்றும், கடந்த 10.12.2019ம் தேதி இரவு 10.30 மணியளவில் கழுகர்கடை கிராமத்தில் சாட்சி2 வீட்டின் திண்ணையில் தெருலைட் வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்த சாட்சி1யை பார்த்து எதிரி ஏற்கனவே உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்து தேவிடியாக் கூதி மகனே எப்ப பார்த்தாலும் என்னையையும் என் அம்மாவையும் ஜாடை பேசிக்கிட்டே இருக்க என்று பொது இடத்தில் அசிங்கமாக பேசி சாட்சி1ன் வலது பக்கம் தலையில் கத்தியால் வெட்டி சாதாரண காயத்தை ஏற்படுத்தி சாட்சி1ஐ பார்த்து இன்னைக்கு நீ தப்பலாம் நாளைக்கு நீ இல்லாவிட்டால் உன் சொந்தத்தில் உள்ள யார வேண்டுமானாலும் வெட்டுவேன் என கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்துள்ளனர்.

10) அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:04:50 +0530

சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எதிரி தான் இந்த குற்றச்சம்பவத்தை செய்தார்கள் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் வாதிட்டார்.

11) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ராஜேந்திரன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி உதயக்குமாரை தனக்குத் தெரியும் என்றும், அவர் தனது உறவினர் என்றும், எதிரியுடன் தான் தற்போது சமாதானமாகிவிட்டதாகவும், கடந்த 10.12.2019 ம் தேதியன்று இரவு 10.30 மணியளவில் சாட்சி கோபி என்பவரது வீட்டின் அருகே தான் இருந்தபோது யாரோ ஒருவர் அங்கு வந்து தன்னைப் பார்த்து அசிங்கமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், இருட்டாக இருந்ததால் அவர் யாரென்று தனக்கு தெரியவில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது தான் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் மனு அ.த.சா.ஆ.1 என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 கோபி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி உதயக்குமாரை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.1 ராஜேந்திரனைத் தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.2ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13)இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 முத்துராக்கு தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி உதயக்குமாரை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.1 ராஜேந்திரனைத் தெரியும் என்றும், அ.சா.2 தனது கணவர் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:04:56 +0530

என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.3ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 கண்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 10.12.2019 ம் தேதியன்று 23.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் நிலையப் பொறுப்பிலிருந்தபோது கழுகேர்கடை காலனியைச் சேர்ந்த மாயன் மகன் ராஜேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண். 405/2019 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் 109 ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் திருப்புவனம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் எல்லம்மாள், கணபதிகார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளனர் என்றும், பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான ராஜேந்திரன், கோபி, பிச்சையம்மாள், முத்துராக்கு, பிரபாகரன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அவரை அதே நாள் கழுகர்கடை பேருந்து நிறுத்ததில் வைத்து எதிரியை அடையாளம் கண்டு அவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், அதன் பின்பு காயம்பட்ட ராஜேந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஸ்டீபன் தனபால் என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், அதன் பின்பு மேற்படி சார்பு ஆய்வாளர் இந்த வழக்கில் மற்றொரு எதிரியான நாகரத்தினம் த/பெ.ஆறுமுகம் என்பவர் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என தனது சாட்சி விசாரணையில் இருந்து தெரியவந்தது என கூறி அவரை இந்த வழக்கிலிருந்து

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:05:01 +0530

நீக்கரவு செய்து எதிரி நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கையை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன் பின்பு சார்பு ஆய்வாளர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் கடந்த 22.01.2020 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சம்பவ சாட்சிகளின் சாட்சியத்தை வைத்தே எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றி இந்நீதிமன்றம் தீர்மானிக்க முடியும். ஆனால் இவ்வழக்கின் சம்பவ சாட்சிகள் யாரும் எதிரி தான் இக்குற்றச்செயல்களை செய்தார் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே இவ்வழக்கில் எதிரி தான் குற்றச் செயல்களை செய்தார் என்ற அரசுத்தரப்பு வழக்கானது அரசுத்தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15) **முடிவாக,** எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள்–23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.23 17:05:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | ராஜேந்திரன், நிகர்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | கோபி, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | முத்துராக்கு, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | கண்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2/அ.சா.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3/அ.சா.4 | பார்வை மகஜர் |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.4/அ.சா.4 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5/அ.சா.4 | காயச்சான்று |
| அ.த.சா.ஆ.5/அ.சா.3 | எதிரி நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை**

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:05:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–
1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.414/2022**
**நாள்: 23.03.2026**
**தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.**

**முடிவாக,** எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு எகும் பிறப்பிக்கப்படவில்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.23 17:05:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்